தமிழ்நாடு பதிவுத்துறை தலைவர் நடவடிக்கைகள், சென்னை 28

முன்னிலை: திரு.ம.ப.சிவனருள், இ.ஆ.ப.,

எண்.44748/கே2/2017 நாள்.11.01.2023

பொருள்: நேரடி நியமனம் - திரு.C.பாஸ்கரன், இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய குழு தொகுதி IV 2015-2016 மூலம் இளநிலை உதவியாளராக நியமனம் - இனமெய்த்தன்மை உறுதி செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண்.5344/PSD-G1/2017-2, நாள்.04.10.2017
2. பதிவுத்துறை தலைவர் ஆணை எண்.44748/K2/2017-2 நாள்.13.10.2017
3. தமிழ்நாடு மாநில கூர்நோக்குக் குழு I ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆணை எண்.17083/CV-5/2018-5 நாள்.29.11.2022
4. செயலாளர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண்.5344/PSD-G1/2017, நாள்.02.01.2023

*****

**ஆணை:**

பார்வை 1-ல் கண்ட தேர்வாணைய கடிதத்தின்படி பதிவுத்துறைக்கு இளநிலை உதவியாளராக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-ல் கண்ட ஆணைப்படி பணி நியமனம் வழங்கப்பட்ட திரு.C.பாஸ்கரன், என்பவரது பணியினை, பார்வை 1-ல் காணும் தேர்வாணையக் கடிதத்தில், தனியரின் இன மெய்த்தன்மை உறுதி செய்யப்பட்ட பின்னரே வரன்முறை செய்து ஆணை பிறப்பித்திட தெரிவிக்கப்பட்டது.

தற்போது, தனியரது இனமெய்த்தன்மை உறுதி செய்யப்பட்டு, மாநில கூர்நோக்குக் குழுவிடமிருந்து பார்வை 3ல் காணும் ஆணை பெறப்பட்டுள்ளது.

எனவே, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 02.11.2017 மு.ப முதல் அவரது பணியினை வரன்முறை செய்தும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(a)(i)ன் படி மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவம் துவங்குவதாகக் கருதியும் ஆணையிடப்படுகிறது.

தனியரது பணிவரன்முறை செய்யப்பட்டது தொடர்பான குறிப்புகளை அவரது பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு சேலம் (மேற்கு) மாவட்டப்பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்./-11.01.2023
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

18/1/2023

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

18/1/23

**பெறுநர்:**
திரு.C.பாஸ்கரன், இளநிலை உதவியாளர்
சேலம் (மேற்கு) பதிவு மாவட்டம்
(மாவட்டப்பதிவாளர் சேலம்(மேற்கு)மூலம்)

**நகல்:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தேர்வாணைய சாலை, சென்னை – 600 003
2. மாவட்டப்பதிவாளர், சேலம் (மேற்கு)
3. முக்கிய ஆணைக் கோப்பு/தனி நகல்